IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.8

| | | |
|---|---|---|
| NAME | - | Velu |
| Father NAME | - | Ekambaram |
| VILLAGE | - | Thennamara theru, Arugathamopoondi,Thottapalayam |
| TALUK | - | Vellore |
| OCCUPATION | - | Painter |
| AGE | - | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சைதாப்பேட்டை முருகன் கோயில் பின்னால் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன வேலுவை தெரியும். 1 வது எதிரி ஜெகன், 4 வது எதிரி பரசுராமனை தெரியும். 2 வது எதிரி மணிகண்டனை தெரியாது. இறந்துபோன அலெக்ஸ் தியோநாதனை தெரியும். இறந்துபோன பாலகிருஷ்ணனை தெரியாது. நானும் சிவசங்கரும் ஒன்றாக வேலை செய்து வருகிறோம். 04.01.2021 அன்று மாலை 05.00 மணிக்கு நானும் சிவசங்கரும் பாலாறு சுடுகாடு பக்கம் தண்ணி அடித்து கொண்டிருந்தோம். அப்போது வேலு, ஜெகன், அலெக்ஸ் தியோநாதன், பரசுராமன், கூட ஒருவர் ,இருந்தார் அவர் பெயர் தெரியவில்லை. அவர் இங்கு ஆஜரில் இல்லை. அவர்கள் அங்கு சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் அங்கு தேவையில்லாத பிரச்சனை என்னு கிளம்பி வந்துவிட்டேன். 11.01.2021 அன்று தான் வேலுவை கொலை செய்துவிட்டு புதைத்து விட்டதாக கேள்விப்பட்டேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வேலூர் ரோடு காட்பாடி வடக்கு தெற்காக உள்ளது. அந்த ரோட்டிற்கு மேற்கு புறம் முத்து மண்டபம் உள்ளது. ரோட்டிற்கு கிழக்கு புறம் சுடுகாடு உள்ளது. போலீசார் விசாரணையில் வேலு எதிரிகள் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன். என் மனைவி பெயர் நந்தினி. என் மனைவிக்கு இறந்துபோன வேலு அண்ணன். இறந்து போன வேலு என் மச்சான் என்பதால் எதிரிக்கு எதிராக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.நான் அன்றைய தினம் அங்கு போகவே இல்லை என்றும் எதிரிகளும் அங்கு இல்லை என்றும் யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

E.வேலு

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

23.7.25

Additional District Judge(FTC)
Vellore.